REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ★ ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 27உ வியாழன் (9—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 28உ வெள்ளி (10—5—57) இதழ் [283

முகத்தை மட்டுமல்ல—மூளையையும் சுத்தம் செய்து கொள்க!

உறுப்பினர்களுக்கு சீனக் கம்யூனிஸ்டுத் தலைமை கட்டளை

பீகிங், மே 8—

தங்கள் முகங்களை மட்டுமின்றி, மூளையையும் சுத்தம் செய்துகொள்ள வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்டுத் தலைவர் கூறியிருக்கிறார்.

கட்சிப் பிரச்சார இலாகாவின் துணைத் தலைவரான

(4-ம்பக்கம் பார்க்க)

'கவர்னர் உரையில் ஒன்றுமே இல்லை'

'பிரச்சினைகளும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் இடம்பெறவில்லை;

'மாநிலத்திற்கும்—டெல்லிக்கும் உள்ள நிதி உறவு அலங்கோலமாயிருக்கிறது'

'மத்திய சர்க்காரின் குறுக்கீடு அதிகரிக்கிறது'

மேல் சபையில் வி. கே. ஜான் முழக்கம்

சென்னை, மே 9—

"மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைப் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான நீண்டகால—குறுகிய காலத் திட்டங்கள் பற்றியும் கவர்னர் உரையில் எதும் இல்லை. இந்தவகையில், இதுவரை இந்தச் சபையில் ஆற்றப்பட்டுள்ள கவர்னர் உரைகளில் இதுதான், ஒன்றுமே பயன் இல்லாத உரையாகும்; மேலும் அவரது உரை, ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாமலிருக்கிறது.

"பல திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாமலிருப்பதற்குக் காரணம், மாநிலத்திற்கும்—மத்திய சர்க்காருக்கும் இடையேயுள்ள நிதி உறவுகள் அலங்கோலமாயிருப்பதுதான்.

"நாம் எப்போதும், மத்திய சர்க்காரிடம் கடன் வாங்கவேண்டியவர்களாகவே இருக்கிறோம்—அளவுக்கு மீறி கடன் வாங்கிக்கொண்டே இருக்கிறோம்.

"இதனால்தான் நான் தி. மு. கழக இயக்கத்திற்கு ஆதரவு காட்ட வேண்டியிருக்கிறது.

"இந்த நிலைமாற நாம் வழிகண்டாக வேண்டும். மேலும், எல்லா விவகாரங்களிலும், துறைகளிலும் எல்லாக் கட்டங்களிலும் மத்திய சர்க்காரின் தலையீடு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது ஒரு நல்ல அறிகுறி அல்ல!

"மாநிலத்திற்கு மேலும் உரிமைகள், சுதந்திரம் இருந்தால் அன்றி, மக்களின் நலனுக்கான பல திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாமற்போய்விடும்"

—என்று சென்னை மேல்(சட்ட)சபை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் டாக்டர் வி. கே. ஜான் அவர்கள், கவர்னர் உரைமீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"கவர்னர் உரையில் சர்க்கார் பல அம்சங்களுக்காகச் செலவு செய்த தொகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; ஆனால், அவை எப்படிச் செலவிடப்பட்டன—பயன் என்ன கிடைத்தது என்பதுபற்றி தகவலே எதும் இல்லை. இனியாவது, கவர்னர் உரைகளில் இந்த விஷயங்கள் இடம் பெறுமாறு செய்யப்படும் என்று நம்புகிறேன்."

தொடர்ந்து பேசிய அவர், 'மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், டில்லி சர்க்கார் ஊழியர்களுக்கும் தரப்படும் சம்பள விகிதங்களில் உள்ள பெரும் ஏற்றத் தாழ்வும், திட்டங்களை அமுல் செய்வதில் உள்ள கஷ்டங்களில் ஒன்றாகும்' என்றும் குறிப்பிட்டார்.

ரூ. 24000 செலவில் நாய்களுக்கு மாளிகை

சென்னை, மே 9—

சென்னை போலீஸ் இலாகாவின் துப்பறியும் நாய்கள் குடியிருக்க ரூ. 24,000 செலவில் ஒரு புதுக் கட்டடம் கட்டப்பட்டு நாய்களுக்கான எல்லா வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளனராம்,

இங்கு தற்சமயம் 6 நாய்கள் உள்ளனவாம்.

'அறிவைப் பாழாக்கி உரிமையை ஒழிக்கும் இந்தி எழுத்துக்கள் எவருக்குத்தான் புரியும்?'

'விடுதலைப் பண் பாடி உரிமை முரசொலித்த கவிஞனின் இலட்சியக் குரல் மதிக்கப்படாததேன்?'

'வீட்டு வேலைகளைத் தாய் செய்வதால் வேலைக்காரி என்று கூறத் துணிவு பிறக்குமா?'

ஆட்சியாளர் குறைகளைச் சுட்டிக்காட்டி சட்ட மன்றத்தில் பேராசிரியர் க. அன்பழகன் கருத்துரை

சென்னை சட்ட மன்றத்தில், கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் தோழர் க. அன்பழகன் அவர்கள் 4-5-57 அன்று நிகழ்த்திய கருத்துரை இங்கு தரப்படுகிறது:—

"இந்த சட்ட மன்றத்தில் நான் நிகழ்த்துகின்ற இந்த முதல் பேச்சு, கவர்னர் பெருந்தகை ஆற்றிய பேருரையைப் பொருத்த அளவில் அது ஒரு பேர் உரையாகத்தான் இருந்தது என்கிற வருத்தத்துடன் கலந்து வெளிவருகிறது.

மே தினத்தைப் பற்றிய குறிப்பு காணோம்!

"மே முதல் நாள் இச்சட்ட மன்றம் கூடியிருந்தும் அந்த மே தினத்தைப் பற்றி எவ்விதக் குறிப்பினையும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தெரிவிக்காததும், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் தமது வருத்தத்தைப் புலப்படுத்தியும் அவர்கள் மதிக்கின்ற தொழிலாளர்களின் மே தினத்தைப் பெருமைப்படுத்தாதது வருந்தத்தக்கதாகும்.

வெகுவிரைவில் வருகிறது!

"இச்சட்ட மன்றம், தமிழ் நாட்டிலுள்ள ஏறத் தாழ மூன்று கோடி மக்களின் பிரதிநிதித்துவம் உள்ளதாக விளங்கியும், இச்சட்ட சபை பிற மாநிலங்களைப் போன்றும்—அவற்றின் அவைகளில் அமைந்திருப்பது போன்றும், மக்கள் எண்ணிக்கைப்படி இன்றுள்ளதைவிட அதிகமாக சுமார் 300 பிரதிநிதிகள் இடம் பெற வேண்டியிருப்பவும், 205 பிரதிநிதிகளே இங்கு இடம் பெற்றிருப்பது வருத்தத்தை அளிப்பதாகும். பொதுமககளுக்கு ஆர்வமும், மகிழ்ச்சியும் ஊட்டக்கூடிய விதத்தில்—ஜனநாயகப் பண்பாட்டைக் காக்கக்கூடிய முறையில் அல்லாமல், இதுவரை இயங்கிய இடத்திலிருந்து சட்ட மன்றத்தை கோட்டைக்குள் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ - மாற்றிக்கொண்டு வந்தது பொது மக்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் மகிழ்ச்சி அளிப்பதாயிருக்கவில்லை. மறுபடியும் 300 பிரதிநிதிகள் இச்சட்ட மன்றத்திற்கு வருகிற நாள் வெகுவிரைவில்—ஐந்து ஆண்டுகள் கழிந்த பிற்பாடேனும் வரும். அப்பொழுதாவது அடுத்த தேர்தலுக்குப் பிறகு இந்தச் சட்ட மன்றம் கோட்டையைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும். அங்ஙனம் பின்னர் ஏற்பட இருப்பதை முன்னரே உணர்ந்து, நல்ல வசதியான இடத்திற்கு உடனடியாக சட்ட மன்றத்தை மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வீரர்களின் வினை நிலம்!

"கடந்த பொதுத் தேர்தலைப் பொருத்தவரையில் ஜனநாயகப் பண்பாடு மிகமிக அமைதியான முறையில் காப்பாற்றப்பட்டதாகச் சொல்கிறார்கள், ஆளுங்கட்சியினர்! ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் அதிகாரப்பீடத்தின் குறுக்கீடுகள் மிகுதியாகவே இருந்தன என்பதை உணர்ந்து ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது என்பதை வருத்தத்துடன் எடுத்துக்கூற விரும்புகிறேன். அதிகாரத்தில் இருந்தபடிச் சிலரும், அதிகாரத்திலே இல்லாமலே பலரும், கையில் வாளேந்திச் சிலரும், வாள் ஏந்தாமலே பலரும் போரிட்டார்கள் சென்ற தேர்தலில்! வாளில்லா வீரர்களா, சுத்த வீரர்களாக எதிர்க்கட்சியினராகிய நாங்கள் போரிட்டோம்! வாள் என்று நான் குறிப்பிடுவது அதிகார வாளைத்தான்!

அளவைக்கொண்டு கணக்கிடாதீர்!

"வாளில்லாத வீரர்களாக, சுத்த வீரர்களாய்க் கருவிகள் இல்லாமல் போரிட்டு ஓர் அளவிற்கு வெற்றியும் பெற்றிருக்கிறோம். எங்களுடைய வீரத்தைப் பொது மக்கள் நன்கு உணர்ந்திருந்திருக்கிறார்கள் என்று இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இங்குள்ள கட்சிகளிலே ஒரு கட்சி பெரும்பான்மைக் கட்சியாகவும், வேறு சில கட்சிகள் மிகமிகச் சுருங்கியதாகவும் வலிவற்றதாகவும், இச்சட்டசபையில் இடம் பெற்றிருப்பதைக்கொண்டு இதுதான் பொது மக்களின் ஆதரவுக்கு அடையாளம் என்று யாரும் கணக்கிடலாகாது. இளைத்திருக்கிற எங்கள் கட்சியோ அல்லது எங்களைப்போன்ற பிற கட்சிகளோ பொது மக்களிடம் அதிக அளவு ஆதரவு பெறவில்லை என்று சொல்லிவிடமுடியாது. நாங்கள் பொது மக்களின் ஆதரவை அதிகமான அளவு பெற்றிருக்கிறோம் என்பது, நாங்கள் பெற்றிருக்கின்ற வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் தெரியும். ஆளும் கட்சியினருக்குள்ள ஆதரவு, பொது மக்களின் வாக்குகளின் எண்ணிக்கையின் உயரம் குறைவாயிருந்தாலும் சட்ட மன்றத்திற்கு அவர்கள் உள்ளே வரும்போது பருத்துவிடுகிறார்கள். வெளியே கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையின் உயரமாயிருப்பினும், உள்ளே வரும்போது நாங்கள் இளைத்துவிடுகிறோம். எங்களுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது பொதுமக்களுக்கு எங்கள்பால் உள்ள அன்பும் ஆதரவும் நன்றாகத் தெரியவரும். சனநாயக வளர்ச்சிக்கு இதை மனதில் வைத்துக்கொண்டே, செயலாற்ற வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களுக்கும், அவைத் தலைவர் அவர்களும் சேர்ந்த ஆட்சி நடத்தும் கட்சியினருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொட்டால் துவண்டு விடாத நிலை ஏற்படுமா?

"அவைத் தலைவர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகளின் பெருமையை உணர வேண்டும் என்பதுதான் என் கருத்தாகும். பொதுவாக சனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் வலுவாக இருக்க வேண்டுமென்றால் வெறும் எண்ணிக்கையில் மாத்திரம் அதிகமாக இருந்து பெருங் குழுவாக இருந்தால் மாத்திரம் போதாது என்பதுதான் என் உள்ளக்கிடக்கை. எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும், எதிர்க்கட்சி வலுவாக இருக்க வேண்டுமென்றால் தொட்டால் துவண்டுவிடாமலும், இழுத்தால் கொள்கையை விட்டு ஓடிவிடாத நிலையிலும் நல்ல பண்போடும் உறுதியோடும் இருக்க வேண்டும்.

இன்று-நேற்று வந்ததல்ல

"அடுத்தபடியாக இந்த நாட்டுக்குச் 'சென்னை' என்று இருக்கிற பெயரை மாற்றித் 'தமிழ் நாடு' என்று பெயரிடப்பட வேண்டும் என்று எவ்வளவோ காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. 'தமிழகம்' என்ற பெயர் இன்று நேற்றுவந்ததல்ல — இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள ஏடுகளிலேயும் காணப்படுகிறது. 'தமிழகம்' என்ற சொல், 'வையக் வரைப்பில் தமிழகம் கேட்ப' என்று பிட்டங் கொற்றன் என்ற தமிழ் வீரனைக் குறித்துக் கந்தப் பிள்ளைச் சாத்தன் என்ற புலவர் பாடியுள்ள பாட்டிலேயே காணப்படுகிறது.

"2000 ஆண்டுகளுக்கு முன்பே வழங்கியிருப்பதுபோல 'தமிழகம்'

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—5—57 வியாழன்

ஜனநாயக உணர்வு பெறுவார்களா?

மக்களுடைய விருப்பத்திற்கு காங்கிரஸ் ஆட்சியாளர்களும், அவர்களது ஆதரவாளர்களும் மதிப்பு தரும் இலட்சணத்தை, 'தமிழ்நாடு' என்று பெயரிட அவர்கள் தொடர்ந்து மறுத்து வருவதின் மூலம் அளவிட்டு அறிந்துகொள்ளலாம்.

தமிழ்நாட்டு சட்ட மன்றத்தில் நேற்று முன்தினம், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அத்தீர்மானத்திற்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன: அவை பலவும் திரும்பப் பெறப்பட்டது பற்றியோ, தோற்கடிக்கப்பட்டது பற்றியோ அதிகக் கவலையும் ஏமாற்றமும் கொள்வதற்கில்லை.

நமது தி. மு. கழக சட்ட சபைக் கட்சித் தலைவரான அண்ணா அவர்கள், 'தீர்மானம் ஒருமனதாக நிறைவேற வழி செய்யவேண்டும்' என நனம் நிதி அமைச்சர் கேட்டுக்கொண்டபோது, 'வேண்டுமானால் எங்கள் கட்சியினர் தந்துள்ள எல்லாத் திருத்தங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறோம்; ஆனால், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் பற்றிய திருத்தத்தை மட்டும் வற்புறுத்துகிறோம்' என்று குறிப்பிட்டார்கள்.

'எதிர்க்கட்சியினர் பிரச்சார நோக்கத்துக்காக இன்றி, சர்க்கார் செய்யும் தவறுகளையும் செய்யத் தவறியவைகளையும், எடுத்துரைப்பார்களேயானால் கட்டாயம் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தவற மாட்டோம்' என்று, இந்தத் தீர்மானம் வருவதற்குச் சற்று முந்தித்தான், அதே கனம் மந்திரி சுப்பிரமணியம் வாய்ச்சவடால் அடித்திருந்தார்.

உண்மையில் அவர், தாம் கூறிய வாசகங்களின் பொருளை உணர்ந்திருப்பவரானால், கூறியவற்றிற்குத் தாம் மதிப்பளிக்க விரும்புபவரானால், பெருந்தன்மையோடு 'எல்லா திருத்தங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்கிறோம்: 'தமிழ்நாடு' பற்றிய திருத்தத்தை மட்டும் வற்புறுத்துகிறோம்' என்று கூறிய அண்ணா அவர்களின் கருத்துக்கு அந்த மந்திரி செவிசாய்த்திருக்க வேண்டாமா?

அல்லது அவர் தாயகத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்காதது ஆட்சியாளரின் தவறல்ல என்று கருதுகிறாரா? அல்லது அப்படிப் பெயர் மாற்றம் செய்வதை இந்த மாநில மக்கள் விரும்பவில்லை என்று கருதுகிறாரா?

நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் ஒருமித்து வெளியிடும் ஒரு கோரிக்கையை—தமிழ் மக்கள் அனைவரும் விரும்பி எழுப்பும் ஒரு ஆசையை நிறைவேற்றுவதற்குக்கூட முன்வராத காங்கிரஸ் ஆட்சியாளர்கள், மக்களின் விருப்பத்திற்கொப்ப நடந்து கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்ப்பது? இவர்களிடம் ஜனநாயகப் பண்பு மருந்துக்கும் இல்லை என்பதைத்தானே இவர்களின் இந்தப் பிடிவாதம் காட்டுகிறது?

தமிழ் நாட்டிற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்பதை கவர்னர் உரை மீது கருத்தறிவித்த எல்லா எதிர்க் கட்சி உறுப்பினர்களும் ஒருமுகமாக வற்புறுத்தினர். இதனை ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை என்பதற்கான காரண விளக்கத்தைக்கூட கனம் மந்திரி, விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவிக்க மறுத்துவிட்டார் என்றால், 'எங்களிடம் பெரும்பான்மை பலம் இருக்கிறது' என்ற ஆணவத்தினால் தான் இந்த ஆட்சியாளர்கள் வழிநடத்திச் செல்லப்படுகிறார்கள் என்பதைத் தவிர வேறென்ன?

'பிள்ளையார் சுழி' போடும் போதே, இந்த இலட்சணத்தில் நடக்கத் துவங்கும் இந்தக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள், வரப்போகும் ஆண்டுகளில் ஜனநாயக உணர்வு பெறுவார்கள் என்று நம்மால் கருத முடியவில்லை.

கைதூக்குவதற்கென்றே சட்டமன்றம் நுழைந்துள்ள காங்கிரசார், எத்தனை காலத்திற்குத்தான் நாயகப்பற்றும், மொழிப்பற்றும் அற்றவர்களாக இருக்கப்போகிறார்களோ?

சட்டமன்றம் போன்ற ஜனநாயக அரசுமுறையின் அங்கங்களின் மூலம் தங்கள் கோரிக்கைகளை ஈடேற்றிக்கொள்ள முடியாது போகிற மக்கள், இந்த மன்றங்கள் அமைய அதிகாரமளிக்கும் சட்டங்களுக்கு உட்பட்ட வேறு வழிகளைத் தேடவே நினைப்பார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஆட்சியாளருக்கு நாம் எச்சரித்துவைக்க விரும்புகிறோம்.

ரஷ்யத் தலைவர் வருகைக்கு எதிர்ப்பு?

இந்தோனேஷியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, மே 6—

ரஷ்ய மக்கள் தலைவர் வொரோஷிலோவ், இரண்டு வார கால சுற்றுப்பயணத் திட்டத்துடன் ஜகார்தா விமான நிலையம் வந்ததும், இந்தோனேஷியத் தலைவர் சுகர்னோ நேரில் வரவேற்று தனது மாளிகைக்கு அழைத்துச் சென்றார்.

ஆனால் ரஷ்யத் தலைவர் வருகையை எதிர்த்து அந்த மாளிகை முன் ஏராளமான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அவர்கள் ரஷ்யத் தலைவரின் படத்தையும் கிழித்தெறிந்துள்ளனர்.

அமைதியை நிலைநாட்ட போலீசார் முயன்று கண்ணீர்ப் பிரயோகமும் செய்தனராம்; இதனால் கூட்டத்தினருக்கும்—போலீசாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

சுற்றுப்பயணம் ரத்து

ஜகார்தா, மே 7—

திடீரென்று இன்று பிற்பகல், ரஷ்யத் தலைவர் தன்னுடைய ஜகார்தா சுற்றுப்பயணத்தை ரத்து செய்தார்.

வெப்பத்தைத் தாளமுடியாதது தான் சுற்றுப்பயண ரத்துக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

'திராவிடத்தின் விடுதலைப் பணியில் மக்களுடைய கட்டளையை மதித்து நடப்போம்'

'உத்தரவு கிடைத்தவுடன் சட்ட மன்றத்தைவிட்டு வெளியேறி வருவோம்'

'கைகளில் விலங்கை ஏந்தியுள்ள தமிழ் மாதாவை மறக்கமாட்டோம்'

'மன்றம் சென்ற நாங்கள் 'படை வீரர்'களே தவிர படாடோபக்காரர்கள் அல்ல'

மு. கருணாநிதி இலட்சிய முழக்கம்

6—5—57 அன்று மாலை அமைந்தகரை—இலக்குமிபுரத்தில், வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"திராவிடத்தின் விடுதலைக்கு, சட்டமன்றத்தை விட்டு வெளியே வாருங்கள் என்று நீங்கள் சொல்லுகிற நேரத்தில், வந்தே தீருவோம். எங்களை அனுப்பியவர்கள் நீங்கள்; உங்களுக்காக அனுப்பப்பட்டிருக்கிறோம் — எங்களுக்காக அல்ல! இந்த நாட்டுக்காக - விடுதலைக்காக—அங்கும் ஏதாவது செய்யப்படும் என்பதற்குத்தான் அனுப்பப்பட்டிருக்கிறோம்; அப்படி, 'வெளியே வாருங்கள்' என்ற கட்டளையை சிரமேற்கொண்டு பார்த்து—கட்டளையை நிறைவேற்றுவதற்குத்தான் பாடுபடுவோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வெற்றிக்குப் பாராட்டு நடைபெறுகிறதென்றால், இந்த 5 - ஆண்டு காலத்தில் இன்னொரு முறை நடைபெறலாம் — சட்டமன்றம் முடியும் தருவாயில்!

"நமக்கு அப்படியல்ல; இந்த 5 - ஆண்டு காலத்தில் 6-7 முறை பாராட்டு விழா நடத்துவீர்கள். எதற்காக? திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர்கள், திராவிடத்தின் விடுதலைக்காக 6-7 முறை சிறை செல்லத்தான் போகிறார்கள்; நீங்களும் விடுதலை விழா நடத்தத்தான் போகிறீர்கள்!

"மறந்துவிடமாட்டோம் — விலங்கு கையிலே ஏந்தியிருக்கிற எங்கள் தமிழ் மாதாவை!

"எங்களைப் பெற்ற மாதா தங்கத்தை உடையவள்; கோலாரிலே தங்கம் குவிந்துகிடக்கிறது. அவளைச் சுற்றிலும் மூன்று பெரிய கடல்கள்; அவைகளிலே முத்துக்கள் குவிந்துகிடக்கின்றன. காவேரி, தென் பெண்ணை, பாலாறு, வற்றாத வளமுள்ள நதிகள் பல இருக்கின்றன. இவைகளெல்லாம் இருந்தும் எங்கள் மாதா அடிமையாம் —அடிமையாம்! அழுது கொண்டேதான் உட்கார்ந்திருப்போம் சட்டமன்றத்திலே!

"காமராசர் எழுகின்ற நேரத்திலும்—என்றைக்காவது எழுந்தால், சுப்பிரமணியம் பேசுகிற நேரத்திலும், பக்தவத்சலம் எங்களை மிரட்டுகிற நேரத்திலும், காங்கிரஸ்காரர்கள் எங்களைப் பார்த்து உறுமுகிற நேரத்திலும், 'என்ன செய்வது—நம்முடைய தாய் அடிமையாகிக் கிடக்கிறாள் —அவள் கூண்டிலே போட்டுப் பூட்டப்பட்டுக் கிடக்கிறாள்; அவளை விடுவிக்கவேண்டிய பெரும் பொறுப்பிலே நாம் இருக்கிறோம்,' என்பதை எள்ளளவும் மறந்துவிடமாட்டோம்.

"நாங்கள் உங்களவர்கள்—தமிழர்கள் — திராவிடத்தவர்கள்—இந்தத் தரணியின் சொந்தக்காரர்கள்; இந்தத் தரணியை மீட்கும் வேலையை மேற்கொண்டவர்கள். அதற்காகவே இந்த உயிர் இருக்கிறது; அதற்காகவே இந்தக் கண் இருக்கிறது; அதற்காகவே இந்தக் கரங்கள் இருக்கின்றன; அதற்காகவே இந்த உடல் எடுத்துவிட்டோம் என்கின்ற அத்தகைய உண்மையை—உயர்ந்த நோக்கத்தை—விடுதலை வேட்கையை பெற்றுத்தான் சட்டமன்றத்திலே அமர்ந்திருப்போம் என்பதை தயவு செய்து தாய்மார்களே—பெரியோர்களே—பேரன்பு கொண்ட இளைஞர்களே! அத்தனைபேரும் மறந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

"சட்ட மன்றத்திலே திராவிடம் என்ற குரல்—திராவிட நாட்டின் விடுதலைக் குரல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களால் எழுப்பப்படுகின்றதென்றால், இப்படி ஒரு நாள் வருமாவென்று, நாம் ஒரு நாளும் நினைத்ததில்லை; அந்த நாள் வந்திருக்கிறது. இனி அந்த நாள் நன்னாளாய், சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கிற நாம், திராவிடத்தின் விடுதலையைப் பெற்ற படை வீரர்களாக உலவும் காலம் வரத்தான்போகிறது; வரப்போகிறதென்ற அறிகுறிதானே தவிர வேறல்ல இது!

"அந்த முறையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற இந்த 15-ம், வளரக்கூடிய விதத்தைப் பெற்றது; நிச்சயமாக இந்த 15-ம் 150-ஆக ஆகும். அதற்கு மேலும் ஆகும்; அப்படி ஆக்குகின்ற பெருமையும்—கடமையும், இன்றையத் தினம் இந்த 15 பேரை அனுப்பிய உங்கள் கையில் இருக்கிறது.

"17 இலட்சம், 100 இலட்சமாக — கோடியாக—கோடானு கோடியாக மாற வேண்டும். தென் புலத்திலே இருக்கின்ற திராவிட மக்கள் அத்தனை பேரும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற விடுதலை சேனைக்கு, கையை உயர்த்தி ஆதரவு கொடுத்துவிட்டார்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிவப்பும் — கருப்பும் கலந்த கொடியின் கீழே திராவிடப் படை வீரர்களின் அணிவகுப்பு 'திராவிடத்தைப் பெற்றே தீருவோம்—திராவிடத்தைப் பெற்றே தீருவோம்' என்று வடக்கு நோக்கி குரலெழுப்பிவிட்டது. அப்படி எழுப்பியிருக்கிற இந்தக்குரல் நேருவே வந்தாலும்—அவரைவிட பெரிய மேருவே வந்தாலும், அகிலமே எதிர்த்தாலும்—ஆழ்கடலே கொந்தளித்து எழுந்தாலும்—எரிமலைகள் சீறினாலும்—புலி பாய்ந்தாலும்—சிங்கம் உறுமினாலும்—திராவிட நாட்டினுடைய உதட்டிலிருந்து பின்தங்கோம் —பின்தங்கோம் என்ற முறையிலே அந்தக் குரல் மேலும் எழும்பட்டும்; அதற்கு எங்களையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்; பயன்படுவோம். நாங்கள் படை வீரர்களே தவிர, படாடோபக்காரர்கள் அல்ல என்று கூறிக்கொண்டு, சட்டமன்றத்திலே திராவிடம்—திராவிடம்—திராவிடம் என்றே எண்ணிக் கொண்டிருப்போம் என்று உறுதிகூறி முடிக்கிறேன்"

பழைய திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர்!

பிரிட்டன் — பிரான்ஸ் இணைப்பு சுரங்கவழி அமைகிறது

லண்டன், மே 8—

பிரிட்டனுக்கும் — பிரான்சுக்கும் இடையே இங்கிலீஷ் கால்வாய்க்குள் சுரங்கக் குழாய் மூலம் பாதை அமைக்கும் திட்டத்திற்கு மீண்டும் உயிர் தரப்படுகிறதாம்! இது சம்பந்தமாக சூயஸ் கால்வாய் கம்பெனியும் முக்கிய பங்கெடுத்துக்கொள்ளுமாம்.

குறிப்பு: இந்தச் சுரங்கப்பாதை 36 மைல் நீளமிருக்கும். இதில் 22 மைல் கடலுக்குள் இருக்கும். இதற்கு மொத்தம் 10 கோடி பவுன் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதைக் கட்டி முடிக்க 10 ஆண்டுகள் ஆகும்.

பொருத்தமான சூழ்நிலை கேரளத்தில் நிலவுகிறதாம்

நிலப் புரட்சி வெற்றி பற்றி ஜெயப்பிரகாஷ் நாராயண்

எர்ணாகுளம், மே 8—

"நிலப் புரட்சி செய்து, நிலத்தில் கிடைக்கும் பலனை சமூகத்தின் உரிமையாக்குவதற்குப் பொருத்தமான சூழ்நிலை கேரளத்தில் நிலவுகிறதாம்!

'இந்தச் சோதனை கேரளத்தில் வெற்றி பெற்றால், நிலத்தை கிராமப் பொதுச் சொத்தாக்கும் நடவடிக்கை மற்ற மாநிலங்களுக்கும் பரவி, 1957-ம் ஆண்டு முடிவுக்குள் இந்த வேலை முற்றுப் பெற்றுவிடும்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறியுள்ளார்.

சட்ட சபையில் பத்திரிகை படிக்கலாமா?

'ஆராய்ந்து குறிப்பு எடுக்கலாம்; ஆனால் படிக்கக்கூடாது'

சபைத் தலைவர் தீர்ப்பு

ஆந்திர சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது, கம்யூனிஸ்டு உறுப்பினர் வெங்கடேசுவரலு, பத்திரிகை படித்துக்கொண்டிருந்ததை சபைத் தலைவர் நாகேசுவர ராவ் கவனத்திற்கு அபிவிருத்தித் திட்ட இலாகா அமைச்சர் வி. பி. இராசு கொண்டுவந்தார்.

'சட்டசபையில் பத்திரிகை படிக்கலாமா?' என்று சபைத் தலைவரை அவர் கேட்டார்.

'நான் படிக்கவில்லை; சில விஷயங்களைப்பற்றி குறிப்பு சேகரிக்கிறேன்,' என்று வெங்கடேசுவரலு கூறினார்.

'குறிப்பு சேகரிக்கிறாரா, அல்லது படிக்கிறாரா என்று எப்படி நிர்ணயிக்க முடியும்,' என்று அமைச்சர் மற்றொரு கேள்வி எழுப்பினர்.

'சட்டசபை உறுப்பினர்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது' என்று பதிலளித்து சபைத் தலைவர், அமைச்சரை அமரச் செய்துள்ளார்.

இந்தியாவின் தேசிய வருமானமானது முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் ரூ. 9,110 கோடியாக இருந்தது; 1955—56-ல் அது ரூ. 10,800 கோடியாக அதிகரித்துவிட்டதாம்.

விலைவாசிகள் ஒரே நிலையில் இருப்பதாக வைத்துக்கொண்டால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தேசிய வருமானம் ரூ. 13,480 கோடியாக அதிகரித்துவிடுமாம்.

கேரள சட்டசபையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

விஷய விளக்கங்களை கூறுவதற்கு முதன் மந்திரி மறுத்தாராம்

பி. சோ. கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், மே 7—

கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குக் கேரள முதன்மந்திரி ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு பதிலளித்துக்கொண்டிருந்தார். அப்போது, பி. சோ. கட்சித் தலைவர் பட்டம் தாணுப்பிள்ளை சில தகவல்கள் கேட்க வேண்டுமெனக் கோரி எழுந்தார். இதனை முதன் மந்திரி அனுமதிக்க மறுக்கவே, பட்டம் தாணுபிள்ளை, இச்செயலைக் கண்டிப்பதற்கு என்றுகூறி, வெளிநடப்புச் செய்தார்.

'விளக்கம் கூறுவதற்கு, உறுப்பினர்களை அனுமதிக்க முதன் மந்திரி மறுப்பது நேர்மையல்ல' என்று, பட்டம் கூறியிருக்கிறார்.

தான், தனது உரையில் குறிப்பிடாத விஷயங்களைக் குறிப்பிட்டதாக முதன் மந்திரி பேசியதாகவும், அதனை விளக்கவே தான் எழுந்ததாகவும் பட்டம் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

தலைவர் மறுப்பு

ஒரு காங்கிரஸ் உறுப்பினர், ஒழுங்குப் பிரச்சினை கிளப்பி, முதன் மந்திரி அதுபோன்ற விஷய விளக்கங்களை அனுமதிக்க வேண்டுமென உத்தரவிடுமாறு சபைத் தலைவரைக் கோரிய போது, தலைவர், தான் அப்படி ஒருவரை இணங்குமாறு நிர்ப்பந்திக்க முடியாது என்று கூறிவிட்டிருக்கிறார்.

உண்மையான விஷய விளக்கங்களைச் சொல்ல, முதன் மந்திரி இணங்குவதுதான் முறை என்று சபைத் தலைவர் கூறியதும், நம்பூதிரிபாடு அதனை ஒப்புக்கொண்டாராம்.

சில நிமிடங்கள் கழித்து பட்டம் தனது இடத்திற்கு வந்தாராம்.

பொதுக் குழாய்களைப் புதுப்பிக்க முடிவு

சென்னை சர்க்கார் ரூ. 2½ இலட்சம் கடனுகத் தந்து உதவுமாம்

சென்னை, மே 7—

நகரிலுள்ள பொதுக் குழாய்களில் 1,500 குழாய்களைப் புதுப்பிக்க ரூ. 2½ இலட்சம் நகரசபை ஒதுக்கியுள்ளது. அரசாங்கம் இத்தொகையைக் கடனாகத் தந்துதவ முன்வந்துள்ளதாம்.

சென்னை நகரில் மொத்தம் 4,100 குழாய்கள் உள்ளன; இவற்றில் 1,563 குழாய்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அரசாங்கக் கடன் உதவிமூலம் புதுப்பிக்கப்பட்டனவாம்.

அய்னுவரம்— கொன்னூர் நெடுஞ்சாலை ஓரமாக மழைத் தண்ணீர் சாக்கடை கட்டுவதற்கு ரூ. 1 இலட்சமும், மேற்கு மாம்பலத்தில் மழைத் தண்ணீர் சாக்கடை கட்டுவதற்காக ரூ. 55 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தேர்வும்—பொதுக்கூட்டமும்

தோழர் டி. கே. சீனிவாசன் கலந்துகொண்டார்

20—4—57 மாலை 5-மணிக்கு, இலங்கை தி. மு. கழகப் பொதுக்குழு விஷயாலோசனைக் கூட்டம் கொழும்பு—செம்பட்டாத் தெரு, கழகப் பணிமனையில் திரு. கே. டி. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. மறுநாள் நடைபெறவிருக்கும் பொதுக்குழுவிற்கு வரவிருந்த பல கிளைகளுடையவும், பொதுக்குழு பிரதிநிதிகளுடையவும் தீர்மானங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, திரு. சு. கா. சுந்தராசன் நன்றியுரையோடு இரவு 8-30 மணிக்கு முடிவடைந்தது.

பொதுக்குழு கூட்டம்

21—4—57 காலை 9 மணிக்கு, கொழும்பு-லெயாட்ஸ் பிராட்வே, நாராயண குரு மண்டபத்தில் பொதுக்குழு கூடிற்று. புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் அதிகாரி திரு. ஜே. சோமசுந்தரம் தலைமைவகித்தார். தோழர் டி. கே. சீனிவாசன் கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

திரு. இரா. அதிமணி பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினர்.

பின்னர், இலங்கை தி. மு. கழகப் பொதுசெயலாளராக திரு. ஜே. கே. கே. சுந்தரம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைப் பொதுச்செயலாளர்களாக இரா. அதிமணி; ஏ. இளஞ்செழியன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் சு. கா. சுந்தராசன், அ. ம. அந்தோணிமுத்து, ஜே. சோமசுந்தரம், ஏ. எஸ். மணவைத்தம்பி, இரா. திருமறவன், கே. சீமோன், கே. சௌந்தராசன், எம். ஏ. வேலழகன், கே. எஸ். இராமசாமி, ஏ. நம்பிக்கை, எஸ். சாலமோன், ஜே. சுவாமிதாசன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாகிகள் தேர்தலுக்குப் பின் புதிய பொதுச்செயலாளர் தலைமையில் பொதுக் குழு கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றி மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

பொதுக்கூட்டம்

தொடர்ந்து அதே மண்டபத்தில் திரு. அ. ம. அந்தோணி முத்து தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா. அதிமணி, சு. கா. சுந்தராசன், ஆழ்வார், ஏ. இளஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், 'அழிவும் ஆக்கமும்' என்ற தலைப்பில் பேசினர். புதிய நிர்வாகிகளைப் பாராட்டியும், இலங்கையில் தமிழ் மக்களுக்கேற்பட்டிருக்கிற நெருக்கடி தீர உழைப்பதற்கு தி. மு. கழகமே எல்லா வகையிலும் பொருத்தமானது என்றும் குறிப்பிட்டார்.

★

தீர்மானங்கள்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர எழும் போராட்டங்களுக்கு இலங்கை தி. மு. கழகம் தனது பங்கைச் செலுத்தக்கூடிய வகையில் செயல்படும்; ஆனால், போராட்டங்களின் நோக்கம், ஒரு குறிப்பிட்ட தலைவர்களுக்கோ, ஒரு பகுதி மக்களுக்கோ மட்டுமின்றி இலங்கையில் பரந்து வாழுகின்ற எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படி துவக்கப்படுகிற போராட்டங்களை, எந்த அரசியல் கட்சி நடத்தினாலும், அத்தகு போராட்டங்களுக்கு இ. தி. மு. கழகம் தனது முழு ஆதரவையும் தரும்.

அரசாங்கம் தனிச் சிங்கள மசோதாவை நிறைவேற்றியதின் மூலம் மக்களிடையே நிலவும் மனக்கசப்பும்—துவேஷ உணர்ச்சிகளும் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் தடையாக இருந்து வருகிறது. எனவே, தமிழ்—சிங்களம் ஆகிய இருமொழிகட்கும் சம அந்தஸ்து வழங்கி, மக்கள் ஒற்றுமையைப் பெருக்கி, மக்களுடைய கவனத்தை நாட்டின் முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் தமிழர்களின் உரிமைகளைப் பெறும் பொருட்டு எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும், ஒரு சர்வ கட்சி பாதுகாப்பு மாநாடொன்றைக்கூட்டவேண்டுமென்று இப்பொதுக்குழு எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறது.

திராவிட நாட்டில் அண்மையில் தேர்தலில் வெற்றிபெற்ற தி. மு. கழக அபேட்சகர்கட்கு தனது வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மற்றும், வேலையற்றோர் பிரச்சினையைப்பற்றியும், பொருளாதார சரிவைப்பற்றியும், இலங்கையைக் காமன்வெல்த்திலிருந்து விலகக்கோரியும், அணுசக்தி, நீர் வளிக்குண்டு சோதனைகளைக் கண்டித்தும், ஓர் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வரவேற்பு அளிக்க தூத்துக்குடி நகர மன்ற முடிவு

தூத்துக்குடி, மே 7—

நேற்று தூத்துக்குடி நகர மன்ற உறுப்பினர்கள் கூட்டம், தலைவர் சாம்-மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, 26-5-57 அன்று இங்கு வரவிருக்கும் சென்னை சட்டசபை எதிர்க் கட்சியின் ஒரே பெண் எம்.எல்.ஏ. தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதென ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

இத்தீர்மானம், தி. மு. கழக நகர மன்ற உறுப்பினர்களான தோழர்கள் அய்யாசாமி முன்மொழிய, கே. ஆர். இராமலிங்கம் வழிமொழிய எவ்வித எதிர்ப்புமின்றி ஒருமனதாக நிறைவேறியது. (ந. - நி.)

பைத்தியத்திற்கு காரணம் என்ன?

மருத்துவ மனையில் இடநெருக்கடி ஏன்?

சென்னை, மே 8—

சென்னை மாநிலத்திலும், கள்ளிக்கோட்டையிலும் அரசாங்கம் நடத்திவரும் இரு பைத்தியக்கார விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாம். 1955-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் இந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மதுரையில் புதிதாக ஒரு விடுதியையும் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

'1955-ல் மொத்தம் 4,000 பைத்தியக்காரர்கள் இருந்தனர்; அவர்களில் 1,160 பேர் பெண்களாவர்,' என்று கூறப்பட்டிருக்கிறது.

156 பேர் இறந்துவிட்டனரென்றும், குணப்படுத்தப்பட்டவர்கள் 345 பேர்கள் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

குடும்பக்கவலை, வியாபாரத் தொல்லை, உடல் நோய், சிற்றின்ப வியாதிகள் முதலியவைகள்தான் பைத்தியம் பிடிப்பதற்கு முக்கியக் காரணங்களாம்.

இந்த விடுதிகளுக்காக ரூ. 18,35,000 செலவிடப்பட்டுள்ளதாம்.

ஆரம்பப் பள்ளிகளை

அரசாங்கம் ஏற்று நடத்துமாம்

ஆந்திர மாநிலத்தில் அரசாங்க உதவி பெற்று நடத்தப்படும் ஆரம்பப்பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்தும் என்று கல்வி அமைச்சர் பட்டாபிராமராவ் கூறியுள்ளார்.

'சட்டமன்றம் சென்றுவிட்டதால் இலட்சிய வரலாறு முடியவில்லை'

பாராட்டு விழாவில் அண்ணு, மு. கருணநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டனர்

6—5—57 மாலை 6½ மணிக்கு சென்னை —அமைந்தகரையில், அறிவு இயக்க மன்றம், இளங்கோ நாடக மன்றம், தோழமைக் கழகம் ஆகியவைகளின் சார்பில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டி, தோழர் என். எஸ். தேவராசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முதலாவதாக அண்ணு அவர்கள், தோழர் ஆசைத்தம்பியவர்களுக்கு பாராட்டுரை வழங்கி, சிறிது நேரம் பேசிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

அடுத்து, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, சட்டமன்றத்தில் கழகம் ஆற்றும் பணியை விளக்கி, 15 பேர்கள் என்பதால்மட்டும் நாம் சட்டமன்றத்தில் பேசுவதற்குத் தடையில்லை கிடையாது என்றும், அதேபோல், 150 காங்கிரசுக்காரர்கள் என்பதால் அவர்களுக்குமட்டும் அதிக உரிமை கிடையாதென்றும், மக்களின் குறைகளைச் சொல்வதற்கு சட்டமன்றத்தில் பேசுவதற்கு எவருக்கும் அனுமதி உண்டென்றும், காங்கிரஸ் பலம் கைதூக்கத்தான் பயன்படுமே தவிர, நம்மைவிட திட்டங்களையும்—பிரச்சினைகளையும் யாரும் தெளிவாக சொல்வதில்லையென்பதையும் விளக்கி உரையாற்றினர்.

இறுதியாக, தோழர் மு. கருணநிதியவர்கள், சட்டமன்றம் சென்றதோடு தி. மு. கழக இலட்சிய வரலாறு முற்றுபெறவில்லையென்பதையும், திராவிடம் பெறும் வரையில் இலட்சிய வரலாறு தொடரும் என்பதையும், சட்டமன்றம் திராவிட நாட்டின் விடுதலைக்கான வழிகளில் ஒன்று என்பதையும், மக்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதி நாங்கள் என்றும், என்று மக்கள் சட்டமன்றத்தைவிட்டு வெளியேயிருந்து தாயக விடுதலைக்குப் பாடுபட அழைத்தாலும், நாங்கள் வருவோம் என்று கூறி, திராவிடம் பெற எத்தகைய பணயம் வைக்க வேண்டுமோ அதை தயங்காது ஈந்து இலட்சிய வெற்றிக்குப் பாடுபடுவோம் என்று உணர்மிக்க சொற்பொழிவாற்றினர். தோழர் கலைச்செழியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

'அரசாங்கத்தின் தலையீடு கூடாது'

கல்வி பற்றி விநோபா பாவே

எர்ணாகுளம், மே 7—

"கல்வி, அரசாங்கத்திற்குக் கட்டுப்படாமல் சுதந்திரமானதாக இருக்க வேண்டும். அப்போது தான் மக்களிடையே சுயேச்சையான அறிவு நிறைந்த சிந்தனை இருக்கக்கூடும்"

என்று, ஆச்சாரியா விநோபா பாவே அவர்கள், கூட்டமொன்றில் பேசுகையில குறிப்பிட்டுள்ளார்.

"அரசாங்கம் தலையிட்டு உத்தரவுகள் பிறப்பித்தலின் மூலம் அறிவு வளர்ச்சி தடைப்படும். அதோடு ஆசிரியர்கள், மாணவர்களின் வழிகாட்டிகளாக இல்லாமல், கூலிக்கு மாரடிப்பவர்களாக விளங்குவார்கள். அதுமட்டுமின்றி, ஒவ்வொரு கட்சி அரசாங்கத்திற்கும் ஏற்றவாறு மக்கள் மனதைப் பக்குவப்படுத்தும் கருவிகளாகவும் மாறிவிடுவார்கள்," என்றும் அவர் குறிப்பிட்டு, கல்வித்துறையில் அரசாங்கம் தலையிடுவதின் ஆபத்தை விளக்கியுள்ளார்.

இதில் கருத்து வேற்றுமை கிடையாது

கோவா பற்றி மத குரு

பெங்களூர், மே 7—

"சரித்திரம், பூகோளம், இனம், பண்பாடு ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்கும் போது, நிச்சயம், கோவா இந்தியாவைச் சேர்ந்ததேயாகும். இதில் கத்தோலிக்க மதத்தினருக்குக் கருத்துவேற்றுமையில்லை"

என்று, கத்தோலிக் மதகுரு டாக்டர் தாமஸ், பம்பாய்—கோளம் - ஆந்திரம், வங்காளம் - மைசூர் ஆகிய பகுதிகளிலிருந்து வந்துள்ள 200 மாணவர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இனிமேல் வரப்போகும் விற்பனை வரிச் சட்டம்

தெளிவானதாம்! விரிவானதாம்!

'எவரும் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் மிகத் தெளிவானதும், விரிவானதுமான விற்பனை வரிச் சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்' என்று தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் அறிவித்துள்ளார்.

அரசியல்—பொருளாதார—சமூகக் கருத்துமணங் கமழ

மன்றம்

[ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.]

5-5-57 முதல் ஞாயிறுதோறும் வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில் 12 பக்கங்கள்

தனி இதழ் விலை 16 காசு (ரூ. 0—2—6)

ஆண்டுக் கட்டணம் ... ரூ. 8—0—0

விவரங்கட்கு: நிருவாகி, "மன்றம்"

26, நைனியப்பன் தெரு, மண்ணடி - சென்னை-1.

பேராசிரியர் க. அன்பழகன் கருத்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்ற பெயரை வைப்பது மிகப் பொருத்தமாகும் என்று கூற விரும்புகிறேன். அதை விட்டு விட்டு, மேலும் மேலும் 'சென்னை இராஜ்யம்' என்ற பெயரையே வலியுறுத்தி வருவதை நான் மறுத்துரைக்க விரும்புகிறேன். அதுமத்திரமல்லாமல், கவர்னர் உரையில் இதைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது வருந்தத் தக்கதாகும். 'தமிழ் நாடு'— இதைப்பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். 'தமிழ் நாடு' என்றுதான் பெயர் இருக்க வேண்டும் என்றுள்ள உணர்ச்சி, விடுதலைப் பண் பாடி உரிமை முரசொலித்த பாரதியார், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' —என்று பாடியுள்ள பாட்டினிலேயே முழங்குகின்றது. அரசியல் விழிப்புணர்ச்சியும், உரிமை வேட்கையும் ஏற்பட அப்பாட்டே வழி வகுத்தது.

வெட்கக்கேடு!

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்றுபெயரிட்டு வழங்கும் கட்சியினரே, 'தமிழ்நாடு' என்ற பெயரை சூட்டாதது வெட்கப்பட வேண்டியதாகும். அத்துடன் 'சென்னை இராஜ்யம்' என்றே பெயர் இருந்தால் என்ன என்று கேட்கிறார்கள்?

துணிவு பிறக்குமா?

"நமது வீட்டிலே உள்ள தாய், வீட்டுக்குரிய வேலைகள் அனைத்தையுந் தான் செய்கிறாள்—வீடு கூட்டுகிறாள்—சோறு சமைக்கின்றாள்—கூடம் கூட்டுகின்றாள்—சமையல்காரி வேலைக்காரி போல என்பதால், மற்ற மற்ற வேலைகளையும் செய்கிறாள் என்பதற்காக தாயைப் பார்த்து வேலைக்காரி என்று யார்தான் சொல்லத் துணிவார்கள்? தாயை 'வேலைக்காரி' என்று சொன்னால் தான், மற்றவர்களுக்கெல்லாம் அவளுடைய தன்மை நன்றாகப் புரியும் என்று வாதிப்பார்கள்?

மதிக்க இயலாத வாதம்!

"சென்னை என்று பெயர் இருப்பதில் தவறு ஒன்றுமில்லை— என்று கூறுவது, பொருத்தமற்ற வாதம்.

"இன்றைக்குக் கன்னியாகுமரி பகுதியிலுள்ள தமிழர்கள் தாய்த் தமிழ் நாட்டோடு சேர்ந்திருக்கிறார்கள்; அவர்கள், அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கின்றனர்; நானும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு தாய்த் தமிழ்நாட்டோடு தான் சேர்ந்திருக்கிறோம் என்கிற உணர்ச்சி உண்டாவதற்காகவேனும் 'தமிழ் நாடு' என்று பெயர் வைப்பது மிகவும் அவசியமாகும்.

செயல்முறையில் காணோமே!

இந்த நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது—என்று, சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, செயல்முறையில் தமிழை ஆளும்படிச் செய்ய, விரிவான முறையில் அதை நிறைவேற்றி வைக்க யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பல மாவட்டங்களிலும் தமிழை ஆட்சிமொழியாகக் கையாளுவதில் இந்தக் குறையிருந்து வருகிறது. இதை நிவர்த்தி செய்து, அதற்கேற்ற திறமையுள்ளவர்களைக் கொண்டு திட்டத்தை நிறைவேற்றிவைக்கலாம். இதை நிறைவேற்றுவதில் எதிர்க் கட்சியினர்களுடைய முழு ஒத்துழைப்பையும் தரத் தயாராய் இருக்கிறார்கள்; நாங்களும் ஒத்துழைக்க முன்வருகிறோம். ஆகவே, தமிழைப் பல்வேறு துறைகளிலும் ஆட்சி பெறச் செய்வதற்குத் தக்கநடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி ஆதிக்கம்!

"நம் நாட்டில் இந்தி பல்வேறு துறைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் 'இந்தி' கட்டாயப் படுத்தப்படவில்லை என்று சொல்லிக்கொண்டே இந்தியைத் திணிப்பதற்கு திட்டமிட்டு இன்றைக்கு அஞ்சல் அட்டை, மணியார்டர் பாரம், பணச்சீட்டு, முதலியவற்றில் இந்தி காணப்படுகின்றது. 'இவை, டில்லி அரசின் செயல்; இவற்றில் எல்லாம் தலையிட எங்களுக்கு உரிமையில்லை' என்று சொன்னாலுங்கூட, தமிழ் மக்களுடைய எண்ணத்தை யாவது டில்லி அரசாங்கத்திற்கு, இந்த அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம், ஒரு பக்கம் அவர்கள் பெரும் இலாபத்தை அடைந்தாலும் கூட, நமது உரிமை பறிபோவதையாவது நமது அரசாங்கம் அவர்கட்குக் கூறவேண்டும்.

சாதாரணப் பொதுமக்களுக்குத் தெரியாதே!

"இன்று அஞ்சலட்டை, மணியார்டர் கூப்பன்களிலே எல்லாம் இந்தி எழுத்துக்கள் தான் காணப்படுகின்றன. இவை யாருக்குத் தெரியும்? அரசாங்க அலுவலருக்கு மட்டும் தெரியுமே தவிர, சாதாரணப் பொதுமக்களுக்குத் தெரியாது.

"இவ்விதம் இந்தியைத் திணிப்பது இந்த நாட்டில் உள்ள தமிழர்களின் அறிவை அழித்து, அவர்களின் உரிமையைக் கெடுத்து, அவர்களின் வாழ்வை மாய்த்து, அவர்களை அறிவற்ற பிண்டங்களாக மாற்றுகிறது என்பதை வருத்தத்துடன் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே, இதை மாற்றி மேலிடத்துள்ளவர்கள் இவற்றைத் தமிழ் மொழியில் அச்சடிக்குமாறு செய்யவேண்டும். இதிலுள்ள வருவாய் மத்திய சர்க்காருக்குப் போனாலுங்கூட, நம்முடைய உரிமை பறிபோகாமல் இருக்கவேண்டும்.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

சாதி ஒழிப்புப் போராட்டம்

தோழியர் மணியம்மை உட்பட எழுவர் கைது

சென்னை, மே 7—

மே 5-ந் தேதி முதல் திராவிட கழகத்தினர் நடத்திவரும் சாதி ஒழிப்புப் போராட்டம் புதியதோர் கட்டத்தை அடைந்துள்ளது.

சென்னையில் மறியல் செய்த தோழியர் மணியம்மை உட்பட ஏழு தொண்டர்களை நேற்று போலீசார் கைது செய்துள்ளனர்.

பஞ்சாபின் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம்

சாந்திகார், மே 8—

பஞ்சாப் மாநிலத்தின் 1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2,80,00,000 பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. புதிய விற்பனை வரிகளின் மூலம் ரூ. 1 கோடியே 6 இலட்சம் கிடைக்குமாம்.

எதிர்க் கட்சியினர் எவருமின்றியே பிரிவுப் பிரிவுகளாக மசோதா நிறைவேற்றம்

பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப மறுத்ததால் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

திருவனந்தபுரம், மே 8—

கேரள சட்டமன்றத்தில் உள்ள எல்லா எதிர்க் கட்சியினரும் இன்று வெளிநடப்பு செய்தனர்.

நில வெளியேற்றத் தடுப்பு மசோதாவினை ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டும் என்று காங்கிரஸ், பி. சோ., மற்றும் முஸ்லிம் லீக் ஆகிய மூன்று எதிர்க் கட்சியினரும் கோரினர். ஆனால், இதற்குக் கம்யூனிஸ்டு சர்க்கார் சம்மதிக்காமற்போகவே அனைவரும் வெளிநடந்தனர்.

எதிர்க்கட்சி இடங்கள் காலியாக இருந்தன, சட்டசபையில்!

எதிர்க் கட்சியினர் எவருமே இல்லாமல் சர்க்கார், மசோதாவினைப் பிரிவு பிரிவாக விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றியிருக்கின்றனர்.

"சர்க்கார் தங்களுக்குள்ள மிகக் குறுகிய பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு இம்மசோதாவை பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப மறுப்பது கண்டு நாங்கள் வருந்துகிறோம். இந்தப் போக்கால் நாங்கள் இந்த மசோதா விவாதத்தில் கலந்துகொள்வதற்கில்லை. இந்தப் போக்கினை ஆட்சேபிக்கும் வகையில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்" என்று கூறிவிட்டுக் காங்கிரஸ், பி. சோ. முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் வெளியேறியிருக்கின்றனர்.

முகத்தை மட்டுமல்ல......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோ-யாம் என்பார், 'இப்போது சிறுவில் நடைபெறும் திருத்த இயக்கம், கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அறிவுத் தெளிவு பெற வேண்டும் என்பதற்காக நடைபெறுவதாகும்' என்று கூறியிருக்கிறாராம்;

தூண்டுதல், விவாதம் இவற்றின் மூலம்தான் அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியுமே தவிர, அச்சுறுத்தலினாலேயோ பலாத்காரத்தினாலேயோ முடியாது என்றும் அவர் கூறியிருக்கிறாராம்!

இந்தத் தகவல்களை அறிவிக்கும்போதுதான், முதல்முறையாக, பத்திரிகையாளர் மாநாட்டிற்கு மேற்கத்திய பத்திரிகையாளர் அழைக்கப்பட்டிருந்தனராம்!

சென்னை—சோடா கம்பெனித் தொழிலாளர் முன்னேற்ற சங்க அவசரக் கூட்டம்

9—5—57 இரவு 10 மணிக்கு வண்ணை—கருணாகரர்ஸ் திடலில் மேற்படிக் கூட்டம் நடைபெறும்; பல முக்கிய விஷயங்கள் குறித்து முடிவெடுக்கப்படும்.

சென்னையில் தடை உத்தரவு!

சென்னை, மே 9—

சென்னை நகர எல்லைக்குள் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதைத் தடை செய்து சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் போலீஸ் கமிஷனர் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

இந்தத் தடை உத்திரவு இன்று முதல் மே 22-ந் தேதி வரை அமுலில் இருக்கும்.

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

34, பாந்தியான் ரோடு, எழும்பூர், சென்னை-8.

பொதுமக்களுக்கு தினந்தோறும் மாலை 4மணிக்கு திறந்துவைக்கப்படும்

10—5—1957 மாலை 6 மணி: மாதர் தினம்—பொதுக்கூட்டம்

தலைவர் :

திருமதி லூர்தம்மாள் சைமன், கிராமப் பஞ்சாயத்து அமைச்சர்

பேசுவோர் : திருமதி நீலாவதி—ராமசுப்பிரமணியம்

குமாரி எஸ். பாகீரதி அம்மாள் எம்.ஏ.

குயின் மேரிஸ் காலேஜ், சென்னை

மாலை 7 மணி: நடனம்—குமாரி இ. வி. சரோஜா

பிரவேசக் கட்டணம் கிடையாது

மே தின விழா

★

தென்காசி :

11—5—57 இரவு 8-மணிக்கு தென்காசி தி. மு. கழகச் சார்பில் மேதின விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் எப். ஏ. ஜோசப், எஸ். கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வேலூர்:

11—5—57 மாலை கலாஸ் ஆலமர வீதியில், தி. மு. கழகச் சார்பில், மேதின விழாப் பொதுக் கூட்டம் தோழர் வி. எம். தேவராஜ் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எம். பி. சாரதி, த. கோ. வேந்தன், அ. கருத்தோவியன், கே. குருநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

10—5—57 மாலை 7-மணிக்கு சென்னை — 48-வது வட்ட (சைதை) தி. மு. கழகச் சார்பில், பழைய மாம்பலம் ரோடு—எண். 61, மேல்மாடியில், தோழர் ம. ஆ. பொன்னுசாமி தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

10—5—57 மாலை 6-மணிக்கு பிராட்வே, எண் 4/88, 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் இராம-முல்லை வழுதி தலைமையில் 'எதிர்க்கட்சி ஏன்?' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

11—5—57 இரவு 7-மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை, 23வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் கோ. ஆ. பழனிசாமி அவர்கள் இல்லத்தில், தோழர் பி. ஏ. தேசிகன் அவர்கள் தலைமையில், 'ஜனநாயகம்' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-வடக்கு தியாகராயநகர் (36-வதுவட்டம்) தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

10—5—57 மாலை 7-மணிக்கு கழகப் பணிமனையில் மேற்படி வட்ட செயற்குழுக் கூட்டம், தோழர் மா. இளங்கோ தலைமையில் நடைபெறும்; அதுபோது பணிமனை புதுப்பித்தல், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

திருவப்பூர்—தமிழ் மன்றம் 3-வது ஆண்டு விழா

11—5—57 மாலை 6-30 மணிக்கு திருவப்பூர்—வள்ளுவர் திடலில் மேற்படி ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம் தோழர் மா. சுந்தரேசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

ஆரணி வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

11—5—57 அன்று ஆரணி—அருணகிரி சத்திரத்தில், ஆரணி வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும்; எனவே வட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

திருவையாறு :

காவிரியாற்றில்

10—5—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : மாணிக்கம்

பேசுவோர் :

சிற்றுளி-சுப்பிரமணியம்

ஏ. எம். சண்முகம்

என். தங்கராசு

ஏ. ஆர். சுந்தரம்

சி. நாகராசன்

★

தோப்பூர்—சின்னமணலி :

கவுண்டம்பட்டி 3-ரோடில்

11—5—57 மாலை 5-மணிக்கு

தி. மு. கழகத் திறப்புவிழா

தலைவர் : கே. இராசமாணிக்கம்

பேசுவோர் :

என். எஸ். இளங்கோ

ப. இராமலிங்கம்

அன்பில்—தர்மலிங்கம்

சுற்றுப்பயணம்

மே

10 : மாலை 5மணி-வடுகர்பேட்டை

மாலை 7 மணி—சிறுதையூர்

11 : துறையூர்

12 : திருச்சி

14 : அன்பில்

16 : சார்த்தாமலை

17 : சிக்கத்தம்பூர்

கடலூரில் அகில இந்திய கைத்தறி வாரவிழாப் பொதுக்கூட்டம்

11—5—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி விழாப் பொதுக்கூட்டம் வழக்கறிஞர் இரே. இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது சட்டமன்ற உறுப்பினர் தோழர் ப. உ. சண்முகம், தமிழ்ப் பேராசிரியை குமாரி ஏ. ஆர். இந்திரா ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்.

ஈரோடு மஜீத்—பாண்டியன் சொற்பயிற்சி மன்றத் திறப்புவிழா

11—5—57 மாலை 4-மணிக்கு மேற்படி மன்ற திறப்புவிழா, ஈரோடு—22-வதுவட்ட புதுவீதி, 44-ம் எண் கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மன்றத்தைத் திறந்துவைத்து உரையாற்றுவார்.

டி. கே. கோவிந்தன் மறைவு

சென்னை, மே 9—

நீண்டகாலமாகக் கலைத்துறையில் ஈடுபட்டு, குறிப்பாகச் சமூக நாடகங்கள் இயற்றியும், திரைப் படங்களுக்கு வசனமும் எழுதி முன்னேற்றப் பாதையில் சென்ற தோழர் டி. கே. கோவிந்தன் அவர்கள் நேற்று சென்னை பெரிய மருத்துவ விடுதியில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.